DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 19/2024**

Dt. 09.02.2026

**Deposition of LW3 examined as PW3**

| | |
|---|---|
| Name | ஆரோக்கியமேரி |
| Husband's Name | அருண்பிரதீஷ் |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 09.02.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் வைத்தீஸ்வரன்கோவில் ரயில்வே நிலையத்தில் பாயிண்ட்விமனாக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடன் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் பாயிண்ட்ஸ் மேனாக பணிபுரிந்து வந்தார். கடந்த 08.10.2023 ம் தேதி காலை 5.00 மணி அளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் அ.சா.1 ஸ்டேஷன் மாஸ்டராக பணியில் இருந்த போது எதிரி ராஜசேகரன் அவரிடம் லீவு தருமாறு கேட்டதற்கு அ.சா.1 ஸ்டேஷன் டிரான்ஸ்போர்ட் இன்ஸ்பெக்டரிடம் பேசிவிட்டு ஆறு மணிக்கு மேல் பதில் சொல்வதாக கூறியதாகவும், அப்போது எதிரி ராஜசேகரன் ஆத்திரமடைந்து டார்ச் லைட்டால் அ.சா.1 ன் இடது முழங்கை மற்றும் உதட்டிலும் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனை நான் செல்போனில் வீடியோ பதிவு செய்ததாகவும், பின்னர் ஸ்டேஷன் ஸ்டோர் ரூமில் இருந்த அருவாளை எடுத்து வந்து அ.சா.1 னை தாக்க முற்பட்டதாகவும், போலீசார் விசாணையில் கூறிவிட்டு, தற்போது அ.சா.1 எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும் அவரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

R. Arokiamary 9/2/26

9/2/26
நீதித்துறை நடுவர் எண்-
மயிலாடுதுறை